## முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

அ.வ.எண்.69/2018

பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி சோமையா என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. பர்வீன் பானு, இளநிலை உதவியாளர் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சோமையா | வயது | : | 59/23 |
| தகப்பனார் பெயர் | : | சுந்தரம் | தாலுகா | : | திருமயம் |
| கிராமம் | : | கோட்டூர் | தொழில் | : | விவசாயம் |

நாள்-12.09.2023

பி.வா.சா.1

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் பிரதிவாதி. நான் முதல் விசாரணை நிரூபண பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்திருக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மையானது.

2) 03.09.2018 தேதியிட்ட ஒப்பந்த ஆவணம் அசல் பி.வா.சா.ஆ.1,

3) 10.08.2018 தேதியிட்ட கடிதம் அசல் பி.வா.சா.ஆ.2,

4) 01.03.2021 தேதியிட்ட மனு நகல் பி.வா.சா.ஆ.3,

5) தகவல் அறிவிப்பு கடிதம் மற்றும் வாக்குமூல நகல்கள் பி.வா.சா.ஆ.4,

6) என்னிடம் சீட்டு பணம் பெற்றுக்கொண்டு வாதி எனக்கு எழுதி கொடுத்த கை நோட்டு அசல் பி.வா.சா.ஆ.5,

7) மாவட்ட குற்றப்பிரிவிலிருந்து எனக்கு சார்பு செய்யப்பட்ட கடித நகல் பி.வா.சா.ஆ.6,

8) 11.09.2018 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்புகள் (2 எண்ணிக்கைகள்) பி.வா.சா.ஆ.7,

9) 19.09.2018 தேதியிட்ட இரண்டு பதில் அறிவிப்புகளின் தொகுப்புகள்-2 பி.வா.சா.ஆ.8,

10. மேற்படி பதில் அறிவிப்புகளை நான் அனுப்பி வைத்ததற்கான அஞ்சலக ரசீதுகள் -4, பி.வா.சா.ஆ.9,

11. மேற்படி இரண்டு பதில் அறிவிப்புகளையும் வழக்கறிஞர் பெற்றுக்கொண்டதை காட்டக்கூடிய அஞ்சலக ஒப்புதல் அட்டைகள்-2, பி.வா.சா.ஆ.10,

மு.மா.நீ,

புதுக்கோட்டை.

12. 11.09.2018 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் சார்வு செய்யப்பட்ட நகல் பி.வா.சா.ஆ.11,

13. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பிற்கு 19.09.2018ல் அனுப்பபட்ட பதில் அறிவிப்பு பி.வா.சா.ஆ.12,

14. மேற்படி அறிவிப்பினை நான் அனுப்பி வைத்ததை காட்டக்கூடிய அஞ்சல் ரசீதுகள் (2 எண்ணிக்கை ) பி.வா.சா.ஆ.13,

15. அதை பெற்றுக்கொண்டதை காட்டக்கூடிய அஞ்சலக ஒப்புதல் அட்டை பி.வா.சா.ஆ.14,

16. செல்வகுமார் என்ற நபரை பயன்படுத்தி எனக்கு எதிராக குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு வழக்குகளை தள்ளுபடி செய்யப்பட்டதற்கான உத்தரவின் நகல் பி.வா.சா.ஆ.15,

17. 29.08.2022 தேதியிட்டு நான் வாதிக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன் பி.வா.சா.ஆ.16,

18. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை வாதி பெற்றுக்கொண்டதை காட்டக்கூடிய அஞ்சலக ஒப்புதல் அட்டை பி.வா.சா.ஆ.17,

19. பதில் அறிவிப்பு பி.வா.சா.ஆ.18,

<u>உத்தரவு</u>

(வாதி தரப்பில் பி.வா.சா.ஆ.1 மற்றும் 5 ஆகியவை மோசடியான ஆவணங்கள் என்றும், பி.வா.சா.ஆ.2 மற்றும் 7 முதல்15 வரையிலான ஆவணங்கள் இந்த வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணங்கள் என்று ஆட்சேபணை செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்கள் 1,2,5 மற்றும் 7 முதல் 15 வரையிலான ஆவணங்களின் நம்பகதன்மை மற்றும் ஏற்புதன்மை ஆகியவற்றை குறித்து, உச்சநீதிமன்றம் விசாரணை நீதிமன்றங்களுக்கு, வழக்கு விசாரணையில் சாட்சியம் பதிவு செய்யும்போது ஏதேனும் ஆட்சேபணை செய்யப்பட்டால் அந்த ஆட்சபேணையை பதிவு செய்து கொண்ட தீர்ப்பின் இறுதியில் அது குறித்து முடிவு செய்ய வேண்டும் என்று Bipin Shanthilal Panchlala Vs State of Gujarat and another; 2001(3) SCC Page 1. வழக்கில் வழங்கிய வழிகாட்டுதலின் அடிப்படையில் மேற்படி ஆவணங்கள் குறித்து வாதி தரப்பில் முன்னிலையாகிய

மு.மா.நீ,

புதுக்கோட்டை.

வழக்கறிஞரின் ஆட்சேபணையை பதிவு செய்து, மேற்படி ஆவணங்களின் நம்பகதன்மை, ஏற்புதன்மை மற்றும் வழக்கிற்கு மேற்படி ஆவணங்கள் தேவையானதா என்பதை குறித்து வழக்கின் தீர்ப்பில் முடிவு செய்யப்படும் என உத்தரவிடப்படுகிறது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்கு, வேண்டுகோளுக்கிணங்க வாய்தா வழங்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.